


# பணப் புழக்கம்



## கலைஞர் கடிதம்

## உடன்பிறப்பே,

இஃதோர் நீண்ட கடிதம். பொறுமையாகப் படித்திடல் வேண்டும்.

கழக ஆட்சியிலே பணப்புழக்கம் இல்லை என்ற ஒரு குற்றச்சாட்டை ஒருசிலர் செவிவழிச் செய்தியாக, **Whisper Propaganda** என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே அதுபோல திட்டமிட்ட பிரச்சாரமாக தொடர்ந்து செய்து கொண்டு வருகிறார்கள். படித்தவர்களும், சில பத்திரிகையாளர்களும் கூட இந்தப் பிரச்சாரத்தை நம்பிவிடுகிறார்கள் என்பதுதான் வேதனையான வேடிக்கை. இப்படி நம்பிவிட்டவர்களைப் பார்த்து யார் சொன்னது இப்படிப்பட்ட குற்றச்சாட்டை என்று கேட்டால், யாரோ சிலர் பேசிக்கொள்கிறார்கள் என்ற பதில்தான் வருகிறது.

யாரோ சிலர் ஏன் இப்படிச் சொல்கிறார்கள், ஏன் இப்படிப்பட்ட பொய்யான குற்றச்சாட்டைப் பரப்புகிறார்கள், ஏன் இல்லாத ஒன்றை இருப்பதுபோல இட்டுக் கட்டி எல்லோரையும் ஏமாளிகளாக்க முயற்சிக்கிறார்கள், ஏன் மாயமானைத் துரத்திப் பிடிக்க முயல்கிறார்கள் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால்தான் உண்மை விளங்கும். பொய்மைக்குக் கவசம் போட்டுவிட்டதாலேயே அது உண்மையாகிவிடுமா? உண்மை ஊமையாகிவிடுமா?

இந்தப் பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்தவர்கள் அரசியலை – மக்களுக்குப் பணியாற்றும் வாய்ப்பெனக் கருதிடாமல், தொழிலாகக் கருதுபவர்கள், ஆதிக்க சக்திகள்,

நெல்லுக்கு இறைத்த நீரை முழுக்க முழுக்க புல்லுக்கே கொண்டு சேர்த்தவர்கள், ஊரை அடித்து உலையிலே போட்டுக் கொண்டவர்கள், ஊழலையே வாழ்க்கை நெறியாகக் கொண்டவர்கள், மீண்டும் ஆட்சிக்கு வந்து ஆட்டம் போடலாம் என்று பகல் கனவிலே மிதந்து கொண்டிருப்பவர்கள்தான். அவர்கள் தொடங்கி வைத்த இந்தப் பிரச்சாரம் இது உண்மையாக இருக்குமோ என்கிற அளவுக்கு பரவி யிருக்கிறது. பொய், புகை போன்றது; வேகமாகப் பரவிடும் தன்மை அதற்குண்டு; காற்று வீசத் தொடங்கினால் வந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்.

மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
நூல்
சென்னை

இருட்டில் பரப்பப்படும் இந்தப் பிரச்சாரம் பொய்யானது; போலியானது; மாயமானது; மயக்கம் தருவது என்பதை வெளிச்சத்தைப் பாய்ச்சி, உண்மை விபரங்களை உரக்கச் சொல்லி ஊருக்கு விளக்கிட வேண்டியதும், சந்தேகத்தைச் சாய்த்திட வேண்டியதும் நமது பொறுப்பாகும்.

அனுதாப அலையால் அம்மையார் அரியணையிலிருந்த அந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியில்,

மக்களின் வரிப்பணம் லஞ்சப் பணமாக மாறியது;

சாலை அமைத்ததாகவும், பாலம் கட்டியதாகவும், பழுது பார்த்ததாகவும் கணக்கெழுதிக் கொண்டு, அந்தப் பணத்தையெல்லாம் சுருட்டினர்;

வளர்ச்சிப் பணிகளுக்கான தொகை ஒரு சிலரின் வளர்ச்சிக்குப் போய்ச் சேர்ந்தது;

தொட்டில் குழந்தைத் திட்டம் முதல் சுடுகாட்டுக்

கொட்டகை வரை ஊழலின் நெடிவீசும் பயணம்;

கடந்த கால ஆட்சியில், கிரானைட் உரிமம் வழங்குவதில் மலிந்திருந்த ஊழல் தொடர்பான வழக்கில், முதல் தகவல் அறிக்கையைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையுடன், ஜெயலலிதா ஆட்சியில் தொழில் அமைச்சராக இருந்த திரு.சின்னசாமி சென்னை உயர்நீதிமன்றத்திற்குச் சென்றார். அவரது கோரிக்கையை தள்ளுபடி செய்த உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில்,

“குத்தகை உரிமம் பெற்றவர்கள் பெரும் தொகைகளை லஞ்சமாகக் கொடுத்துள்ளார்கள். குற்றம் சாட்டப்பட்டவர் களுடைய வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட துண்டுச் சீட்டுகளில் எவ்வகையான கரன்சி நோட்டுகள் கொடுக்கப்பட்டன என்று குறித்து வைத்துள்ளதிலிருந்தும், சாட்சிகளின் வாக்கு மூலங்களிலிருந்தும் இது தெளிவாகின்றது'' என்றும்,

“அரசுக்குப் போய்ச் சேரவேண்டிய பணத்தை குற்றம் சாட்டப்பட்டோர் உறிஞ்சி எடுத்துக்கொண்டதன் மூலம் பல கோடி ரூபாய் அளவிற்கு லாபம் அடைந்துள்ளனர்'' என்றும் குறிப்பிட்டிருந்ததை இந்த இடத்தில் நினைவுபடுத்திக் கொள்வது பொருத்தமாக இருக்கும்.

வருமான வரிச் சோதனையில் அ.தி.மு.க. அமைச்சரின் சாதாரண உதவியாளரிடம்கூட கோடிக்கணக்கில் பணம்;

அதிகாரிகளின் வீட்டில் மலையெனக் கரன்சி நோட்டுகள், தங்கம், வெள்ளி, வெளிநாட்டுச் செலாவணி;

இந்த இடத்தில் இரண்டு நாட்களுக்கு முன்பு சென்னை

தனிநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பொன்றை உனக்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

அந்தத் தீர்ப்பில், "தன் கீழ் பணியாற்றிய அலுவலர்களுக்கு எந்த மாதிரியான பயிற்சியை குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரி வழங்கியிருப்பார் என்பதை கற்பனை செய்துகூடப் பார்க்க இயலவில்லை. எல்லா நிலையிலும் நேர்மையையும், நெறி பிறழாத் தன்மையையும் கடைப்பிடித்துவரும் மற்ற ஐ.ஏ.எஸ். அலுவலர்களுக்கிடையே, குற்றஞ்சாட்டப்பட்ட இந்த அலுவலரின் நடவடிக்கை அகில இந்தியப் பணிக்கே அவமானத்தை உருவாக்கிவிட்டது. மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்ற முடிவு மேற்கொண்ட அறிவுக்கூர்மை மிக்க அலுவலர் ஒருவர், அதிகமாக சொத்து சேர்த்திட வேண்டும் என்ற தணியாத ஆசையின் காரணமாக ஊழல் எனும் கேட்டிற்கு இரையாகிவிட்டாரே என்பது மிகவும் பரிதாபகரமானது''

– என்ற தீர்ப்பு இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

அமைச்சர்கள், ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள், கட்சிப் பிரமுகர்கள் பகட்டான வாழ்வு; பங்களா வாசம்; ஆயிரங்களென்றும், இலட்சங்களென்றும், கோடிகளென்றும் அவரவர் கை வலிமைக்கேற்ற சுருட்டல்;

இப்படி ஊரே நாறியது; நாடே காறி உமிழ்ந்தது;

அதிகார துஷ்பிரயோகம், ஆடம்பர ஊதாரிச் செலவுகள், ஆணவ நடவடிக்கைகள், நிர்வாகச் சீர்குலைவு என்று பொது வாழ்விற்கே பேரிழுக்கு உருவாக்கப்பட்டிருந்தது; மக்களாட்சி

யின் மதிப்பிற்குரிய அங்கமான அரசியல்வாதி என்று சொல்லிக்கொள்வதற்கே பெருத்த அவமானம் இழைக்கப் பட்டிருந்தது.

சகதிச் சாகரத்தில் மூழ்கிக் கொண்டிருந்த ஜனநாயகத் தேரை மீட்டு, விருப்பு வெறுப்பின்றித் தக்க நடவடிக்கைகள் எடுத்து தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லாட்சி வழங்குவோம்; நேர்மையான, தூய்மையான, வெளிப்படையான நிர்வாகத்தை வழங்குவோம் என்று தி.மு.கழகம் உறுதி கூறி, அந்த உறுதி மொழியை உவகையுடன் ஏற்ற தமிழகத்து மக்களின் பேராதரவுடன் 1996–ல் நான்காவது முறையாகக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது.

இந்த ஐந்தாண்டுக் காலத்தில் கழக அரசு அனைத்து முனைகளிலும் உருவாக்கியுள்ள சாதனைச் சரித்திரம் தனிச்சிறப்பு வாய்ந்தது.

இவர் ஆட்சிக்கு வந்தால் முழுமையாக ஐந்தாண்டுகள் ஆட்சியில் இருக்க மாட்டார் என்று பிரச்சாரம் செய்தார்கள்; அது பொய்த்து விட்டது.

இவர் ஆட்சிக்கு வந்தால் மழை பெய்யாது என்று சொல்லிப் பார்த்தார்கள்; அதுவும் பலிக்கவில்லை; பொய்யாகிவிட்டது; பாலாற்றிலேகூட நீண்ட காலத்திற்குப் பிறகு வந்த வெள்ளத்தைப் பார்த்து பூஜை செய்ய பாலாற்றங்கரைக்கே சென்றார் காஞ்சி சங்கராச்சாரியார் அவர்கள்.

இவர் ஆட்சிக்கு வந்தாலே உணவுத் தட்டுப்பாடு

வந்துவிடும் என்று பரப்பிப் பார்த்தார்கள்; உணவுப் பொருள்கள் உற்பத்தியில் தமிழகம் இன்று முன்னணி மாநிலமாக வந்துவிட்டது; பழி பரப்பப் பார்த்தவர்கள் வாயடைத்துப் பதுங்கி விட்டார்கள்.

பகட்டு, படாடோபம், பளபளப்பு எதுவுமின்றி எளிமை, அமைதி, இனிமை என்று மக்களாட்சியின் மாண்புகள் பேணப்பட்டு வாக்களித்தோர், வாக்களிக்காதோர், ஆளும் கட்சியினர், எதிர்க் கட்சியினர், பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேதம் போக்கி, வேறுபாட்டின் வேரகற்றி, சமத்துவ நோக்குடன் நடைபெற்று, அனைத்துத் தரப்பு மக்களின் ஆதரவினையும் பெற்றுவரும் கழக ஆட்சியின்மீது எந்தக் குற்றச்சாட்டையும் கூறமுடியாதோர், குற்றச்சாட்டைக் கூறி சட்டத்தின் சன்னிதானத்திலே சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க முடியாமல் நிலை குலைந்தோர், கடைசியாகக் கண்டெடுத்த காகிதக் கணைதான் ‘பணப் புழக்கம் இல்லை’ என்பது.

இவர்கள் சொல்லுகின்ற பணம் வெள்ளைப் பணம் அல்ல; கள்ளப் பணம், கறுப்புப் பணம், லஞ்சப் பணம்.

ஊழலின் ஊற்றுக் கண்கள் முழு அளவுக்கு இல்லை என்றாலும் பெருமளவுக்கு அடைக்கப்பட்டு வருகிறது.

திறந்த வெளியிலேயே ஊழல் உலவிக் கொண்டிருந்த நிலை இன்று மாறிவிட்டது; திரை மறைவில், இருட்டறையில், நிழல் மடியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இன்றும் இருக்கலாம், நான் மறுக்கவில்லை.

ஊழல், மகத்துவ வேடமணிந்து மரியாதை பெற்றிருந்த காலம் மலையேறி வருகிறது; ஊழல், ஒரு கொடுமை, புற்றுநோய் என்பதைப் பெரும்பாலானோர் உணர்ந்து வருகிறார்கள்.

எனவே ஊழல் உலா பெருமளவுக்கு முற்றுப் பெற்றாகிவிட்டது.

1996 – தேர்தலின்போது கழகம், தமிழக மக்களுக்கு வாக்களித்தபடி, ஊழல் புரிந்தோரை விசாரித்து உண்மைகளை ஊரார்க்கு அறிவித்திட மூன்று தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு 46 வழக்குகள் தொடரப்பட்டன. சில வழக்குகளில் தீர்ப்புகள் வழங்கப் பட்டுள்ளன; பல வழக்குகளில் விசாரணைகள் நடைபெற்றும் வருகின்றன.

விசாரணைகளைத் தவிர்ப்பது எப்படி, தாமதப்படுத்து வது எப்படி என்று சட்டத்தின் சந்து பொந்துகளில் எல்லாம் நுழைந்து ஆராய்ச்சிகள் நடப்பதையும், அவை அரங்கேறி வருவதையும் நாட்டு மக்கள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டுதான் வருகிறார்கள். இந்த வழக்குகளில் வருவாய்க்கு மீறிய சொத்துக்கள் என்றும், அரசுப் பணத்தை மோசடி செய்து, சதி எண்ணத்தோடு கைப்பற்றிக் கொண்ட ஊழல் பணம் என்றும், குறிப்பிடப்பட்டுள்ள தொகை சுமார் ஆயிரம் கோடி ரூபாயாகும். இது இன்று புழக்கத்தில் இல்லாத பணம்தான்.

அன்றைய ஆட்சியாளர்கள், அவர்களது பினாமிகள், பினாமிகளின் உறவினர்கள், உறவினர்களின் நிழல்கள்,

நிழல்களின் மாயங்கள் என்று கடலுக்கடியில் கால்வாய் கட்டி, ஆகாயத்தில் பாதை அமைத்து வெளிநாடுகளுக்குக் கொண்டு சென்று முதலீடுகள் செய்துள்ள தொகை சுமார் ஆயிரம் கோடி ரூபாயாகும். இது இன்று இங்கே புழக்கத்திலே இல்லாத பணம்தான்.

சட்டத்தின் கண்களில் மிளகாய்ப் பொடியைத் தூவிவிட்டு, அதன் காதுகளில் நெருப்புக் குழம்பை நிரப்பிவிட்டு, இங்கேயே யாரும் கண்டுகொள்ள முடியாத அளவுக்கு வரிஏய்ப்பு செய்து, முத்திரைக் கட்டண மோசடி புரிந்து, தோட்டங்கள் – துரவுகள் என்றும், பண்ணை களென்றும், பண்ணை வீடுகளென்றும், நிலபுலன்களென்றும், டன் டன்னாக தங்கமென்றும், வைர வைடூரியமென்றும் குவித்துள்ளவை மட்டும் சுமார் ஐநூறு கோடி ரூபாய் மதிப்புள்ளவை. இது இன்று புழக்கத்திலே இல்லாத பணம்தான்.

1996 – மே மாதம் தேர்தல்கள் முடிவுபெற்று, உடன்பிறவாச் சோதரியார் நேரு ஸ்டேடியத்தில் பதவியேற்பை வைத்துக் கொள்ளலாம் என்று முடிவெடுத்து, அன்றைய தலைமைச் செயலாளரும், காவல்துறைத் தலைவரும் அதற்கான ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்த நிலையில், தேர்தல் முடிவுகள் வெளிவரத் தொடங்கியதும் மக்களின் மனநிலையை உணர்ந்து, தோட்டத்தில் அடைத்து வைத்திருந்த கரன்சி மூட்டைகளை சில புல்லுருவிப் போலீசார் துணையுடன் கன்டெய்னர்களில் ஏற்றி திராட்சைத்

தோட்டத்திற்கும், திக்கு தெரிந்தறிந்து கொள்ள முடியாத எல்லைகளுக்கும் கடத்திய வகையில் சுமார் ஆயிரம் கோடி ரூபாய். இது இன்று புழக்கத்திலே இல்லைதான்.

வட்டி விகிதத்தை உயர்த்தியும், முதலீடு செய்த பணத்தைக் குறுகிய காலத்தில் இரட்டிப்பாக்கித் தருவோம் என்றும், அப்பாவிப் பொதுமக்களை ஏமாற்றி ஆளுங்கட்சிக்காரர்களின் ஆசிகளுடன் மோசடி நிதி நிறுவனங்கள் திரட்டிய தொகை மொத்தம் 1,300 கோடி ரூபாய் – இந்தப் பணம் முழுவதும் ஒரு சிலர் பெயர்களில் அசையாச் சொத்துக்களாக ஆழப் புதைந்து கிடக்கிறது. அது புழக்கத்திலே இல்லாத பணம்தான். அதனை மீட்டு அப்பாவிப் பொதுமக்களைக் காப்பாற்றக் கழக ஆட்சியில் தனிச் சட்டமியற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு இதுவரை 300 கோடி ரூபாய் மீட்கப்பட்டுள்ளது.

அரசுக்குச் சொந்தமான நிலங்களை ஆளுங் கட்சியினரே ஆக்கிரமித்துக் கொள்வது, அவற்றை அரசு அங்கீகாரம் இல்லாமலேயே மனைகளாகப் பிரித்து ஏதுமறியா ஏழை மக்களின் தலையிலே கட்டி, அவர்கள் உழைத்துச் சேர்த்த ஊதியத்தைக் கறுப்புப் பணமாகப் பெற்றுக்கொண்டு பத்திரப்பதிவின்றி கைமாற்றியது பெருமளவுக்கு இன்று தடுக்கப்பட்டுள்ளது. ஏழைமக்கள் வியர்வையால் விளைந்த வெள்ளைப் பணம், கறுப்பாக மாற்றப்பட்டது இன்று புழக்கத்திலே இல்லைதான்.

கழக ஆட்சியில் அரசுப் பணிகளுக்கு ஆளெடுப்பதில்

ஒளிவு மறைவில்லாமல் வெளிப்படையாக முறைப்படுத்தப் பட்டுள்ளதால், வேலை வாங்கித் தருகிறேன் என்று சொல்லி ஆளுங்கட்சிக்காரர்கள் நடத்திய லஞ்ச வேட்டை நசுக்கப்பட்டு விட்டது. உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமானால் கழக ஆட்சியில் இதுவரை 41 ஆயிரத்து 887 இடைநிலை ஆசிரியர்கள் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் யாருடைய பரிந்துரையுமின்றி, யாருக்கும் கையூட்டு வழங்காமல், வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள முதுநிலைப்படி பணிநியமனம் பெற்றுள்ளனர். ஒவ்வொரு நியமனத்தின்போதும், தனது முதுநிலை தனக்கே தெரியுமாதலால், தனக்கு நிச்சயம் பணி கிடைக்குமா, கிடைக்காதா என்பது பதிவு செய்து கொண்டுள்ள ஒவ்வொருவருக்கும் தெரியும். பல்வேறு பணி நிலைகளுக்கும், வேலைவாய்ப்புப் பதிவு முதுநிலை என்ற முறை விரிவு படுத்தப்பட்டு, நியமனங்கள் கழக ஆட்சியில் நேர்மையான முறையில் நடைபெறுகின்றன; அதனால் லஞ்சப் பணப் புழக்கம் என்ற நேர்மை தவறும் நேர்வுகள் முறியடிக்கப் படுகின்றன.

ஆனால்; அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நியமனங்கள் இப்படியா நடைபெற்றன? 8 ஆயிரத்து 450 இடைநிலை ஆசிரியர்கள் நியமனங்களுக்கும் குறைந்தபட்சம் தலா 20 ஆயிரம் ரூபாய் என்று வைத்துக் கொண்டால்கூட, 16 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவு செய்திருக்கவேண்டும். இளைஞர்களின் வேலை வாய்ப்புகளில், எதிர்காலத்தைப் பற்றிய அவர்தம் கனவுகளைக் கசக்கிப் பிழிந்து, கந்து

வட்டிக்குக் கடன் வாங்கச் சொல்லிக் கறந்த கறுப்புப்பணம் இன்றைக்குப் புழக்கத்திலே இல்லைதான்.

மாநிலத்தில் பணப் புழக்கம் என்பது அரசாங்கம் நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கின்ற மொத்த வருவாய்–மொத்தச் செலவு, வேளாண் உற்பத்தி மதிப்பு, தொழில்களில் செய்யப்படும் முதலீடு–தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப் படும் பொருள்களின் மதிப்பு, உற்பத்தி மற்றும் விற்பனைகளின் மதிப்பு, ஏற்றுமதியாகும் பொருள்களின் மதிப்பு, வங்கிகளின் மூலமாக வழங்கப்படும் கடன் அளவு, வைப்பீட்டு அளவு, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், விவசாயத் தொழிலாளர்கள், தொழிற்சாலைப் பணியாளர்கள், பல்வேறு வகைப்பட்ட வியாபார நிறுவனங்களிலே வேலை செய்வோர், அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாராத தொழிலாளர்கள் என்று சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் மாதந்தோறும் பெற்று வரும் ஊதியங்கள் என்ற பலவகைக் காரணக்கூறுகளைச் சார்ந்தே அமையும்.

1993–94ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் வருவாய் கணக்கில் வரவு 7,215.13 கோடி ரூபாய்; வருவாய் கணக்கில் செலவு 8,407.41 கோடி ரூபாய். 1994–95ஆம் ஆண்டு வரவு 8,135.44 கோடி ரூபாய்; செலவு 9,187.16 கோடி ரூபாய். 1995–96ஆம் ஆண்டு வரவு 9,689.22 கோடி ரூபாய்; செலவு 10,857.84 கோடி ரூபாய். 1996–97ஆம் ஆண்டு வரவு 11,760.33 கோடி ரூபாய்; செலவு 13,047.20 கோடி ரூபாய். 1997–98ஆம் ஆண்டு வரவு 13,418.40 கோடி ரூபாய்; செலவு 14,893.59 கோடி

ரூபாய். 1998–99ஆம் ஆண்டு வரவு 14,198.52 கோடி ரூபாய்; செலவு 17,183.94 கோடி ரூபாய். 1999–2000ஆம் ஆண்டு வரவு 16,465.29 கோடி ரூபாய்; செலவு 20,166.02 கோடி ரூபாய். 2000–2001ஆம் ஆண்டு வரவு 18,396 கோடி ரூபாய்; செலவு 22,318 கோடி ரூபாய்.

அ.தி.மு.க. ஆட்சியின் கடைசி ஆண்டான 1995–96ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கழக ஆட்சியின் 2000–2001ஆம் ஆண்டில் வருவாய் கணக்கில் வரவு ஏறத்தாழ இரண்டு மடங்காகி இருக்கிறது. அதைப்போலவே செலவும் இரண்டு மடங்கிற்கு மேல் உயர்ந்திருக்கிறது. இந்தப் பணம் அனைத்தும் நேரடியாக புழக்கத்திற்கு வருவதுதான். இஃதன்னியில் பல்வேறு திட்டப் பணிகளை நிறைவேற்றுவதற்கு உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் போன்ற பன்னாட்டு மற்றும் உள்நாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து வாங்குகிற கடன் தொகைகள் அனைத்தும் நேரடியாகப் புழக்கத்திற்கு வந்து, பொதுச் சொத்துக்களாக உருமாற்றம் பெறுபவைதான்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஆசிரியர்கள் உள்ளிட்ட அரசு ஊழியர்களின் எண்ணிக்கை பனிரெண்டரை இலட்சம் பேர். அடுத்து தொழிலாளர்களை இரண்டு வகையாகப் பிரித்துக்கொள்ளலாம். முழுநேரமும் வேலை செய்யும் அடிப்படைத் தொழிலாளர்கள் என்பது முதல்வகை. இந்த முதல் வகையில் விவசாயத்தில் நேரடியாக ஈடுபட்டிருப்போர்,

விவசாயத் தொழிலாளர்கள், தொழிற்சாலைகளில் பணி யாற்றுவோர், இன்னபிறர் என்று 94.23 சதவீதம் பேர், அதாவது, 2.30 கோடி அடிப்படைத் தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். பகுதிநேரத் தொழிலாளர்கள் என்ற வகையில், அதாவது, ஆண்டு முழுதும் தொடர்ந்து வேலை கிடைக்காமல், ஆனால் குறிப்பிட்ட பருவ காலங்களில் மட்டுமே வேலை செய்து வாழ்க்கை நடத்துவோர் இரண்டாவது வகை. இந்த வகையில் 5.77 சதவீதம் பேர், அதாவது, 15 இலட்சம் பேர் இருக்கிறார்கள்.

விவசாயத்திலே நேரடியாக ஈடுபட்டிருப்போர் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் என்பவர்களின் எண்ணிக் கையை மட்டும் பார்த்தால் 56 சதவீதம் பேர் இதிலே அடங்குவர். தொழிற்சாலைகளிலே பணியாற்றுவோர், மற்ற வணிக நிறுவனங்களிலே வேலை செய்வோர் எண்ணிக்கை 39 சதவீதமாகும். இவர்கள் அனைவரும் மாதந்தோறும் பெற்றுவரும் வருவாய் அல்லது ஊதியம் அவர்கள் செய்யும் சேமிப்பு போக பெருமளவுக்கு புழக்கத்திலே வரும்.

ஆசிரியர்களை மட்டும் எடுத்துக்கொண்டால், ஐந்தாவது சம்பளக் கமிஷன் பரிந்துரைகளை ஏற்று, கழக அரசு 20.7.1989 அன்று வெளியிட்ட ஆணையில் ஊதியங்களை 1.6.1988 என்று முன்தேதியிட்டு திருத்தி வழங்கியபடி, இடைநிலை ஆசிரியர் சராசரியாக மாதச் சம்பளம் 1,564 ரூபாய் பெற்றவர், கழக அரசு 13.4.1998 அன்று வெளியிட்ட ஆணையில் ஊதியங்களை 1.1.1996 என்று முன்தேதியிட்டு திருத்தி வழங்கியபடி 5,750 ரூபாய் பெற்று

வருகிறார்; பட்டதாரி ஆசிரியர் 1,920 ரூபாய் பெற்றவர் இன்று 7,250 ரூபாய் பெற்று வருகிறார்; முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் 2,510 ரூபாய் பெற்றவர் இன்று 8,500 ரூபாய் பெற்று வருகிறார்; இடைநிலைப்பள்ளி தலைமையாசிரியர் 2,291 ரூபாய் பெற்றவர் இன்று 7,900 ரூபாய் பெற்று வருகிறார். இப்படி ஏழரை ஆண்டுக்கால இடைவெளியில் சராசரியாக மூன்று மடங்கு சம்பளம் உயர்ந்திருக்கிறது.

அரசுப் பணியாளர்களை மட்டும் எடுத்துக்கொண்டால், ஐந்தாவது சம்பளக் கமிஷன் பரிந்துரைகளை ஏற்று, கழக அரசு 20.7.1989 அன்று வெளியிட்ட ஆணையில் ஊதியங்களை 1.6.1988 என்று முன்தேதியிட்டு திருத்தி வழங்கியபடி, இரவுக் காவலர் உள்ளிட்ட அலுவலக உதவியாளர் சராசரியாக மாதச் சம்பளம் 861 ரூபாய் பெற்றவர், கழக அரசு 13.4.1998 அன்று வெளியிட்ட ஆணையில் ஊதியங்களை 1.1.1996 என்று முன்தேதியிட்டு திருத்தி வழங்கியபடி 2,973 ரூபாய் பெற்று வருகிறார்; கிராம நிர்வாக அலுவலர் உள்ளிட்ட இளநிலை உதவியாளர், தட்டச்சர், ஓட்டுநர் 1,249 ரூபாய் பெற்றவர் இன்று 4,050 ரூபாய் பெற்று வருகிறார்; உதவியாளர் 1,564 ரூபாய் பெற்றவர் இன்று 5000 ரூபாய் பெற்று வருகிறார்; கண்காணிப்பாளர் 2,353 ரூபாய் பெற்றவர் இன்று 7,450 ரூபாய் பெற்று வருகிறார்; போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் 2,130 ரூபாய் பெற்றவர் இன்று 6,600 ரூபாய் பெற்று வருகிறார்; போலீஸ் இன்ஸ்பெக்டர், தாசில்தார், வட்டார வளர்ச்சி அலுவலர் 2,660 ரூபாய் பெற்றவர் இன்று 8,500 ரூபாய் பெற்று வருகிறார்; தலைமைச்செயலக பிரிவு அலுவலர்

2,750 ரூபாய் பெற்றவர் இன்று 8,570 ரூபாய் பெற்று வருகிறார்; உதவி இயக்குநர், வணிகவரி அலுவலர், உதவி ஆணையாளர், துணைப் பதிவாளர், உதவி செயற் பொறியாளர் 3,100 ரூபாய் பெற்றவர் இன்று 10,750 ரூபாய் பெற்று வருகிறார்; துணை இயக்குநர், கூடுதல் போலீஸ் கண்காணிப்பாளர், சிவில் சர்ஜன், தலைமைச்செயலக சார்புச் செயலாளர் 3,925 ரூபாய் பெற்றவர் இன்று 12,831 ரூபாய் பெற்று வருகிறார்; இணை இயக்குநர், இணைப் பதிவாளர், போலீஸ் கண்காணிப்பாளர், அரசு துணைச் செயலாளர் 4,545 ரூபாய் பெற்றவர் இன்று 14,650 ரூபாய் பெற்று வருகிறார். இந்தப் பிரிவிலும் சுமார் மூன்று மடங்கு ஊதியம் உயர்ந்துள்ளது.

அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் மொத்தம் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் பேர் வேலை செய்து வருகிறார்கள். இவர்களது ஊதியமும் படிப்படியாக உயர்த்தப் பட்டு வருகிறது. 2.9.1989 அன்று கழக ஆட்சியில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி போக்குவரத்துத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் மாதம் ஒன்றுக்கு 1,296.20 ரூபாய் என்றும், அதிகபட்ச ஊதியம் 1,652.90 ரூபாய் என்றும் நிர்ணயிக்கப்பட்டது. அதே ஒப்பந்தத்தின்படி, போக்குவரத்துக் கழக மேற்பார்வையாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் 1,689.80 ரூபாய் என்றும், அதிகபட்ச ஊதியம் 2,021.90 ரூபாய் என்றும் நிர்ணயிக்கப்பட்டது. 13.2.1999 அன்று மீண்டும் கழக ஆட்சியில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி போக்குவரத்துத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் மாதம் ஒன்றுக்கு 6,195.60 ரூபாய் என்றும், அதிகபட்ச ஊதியம் 7,055.60 ரூபாய்

என்றும்; அதே ஒப்பந்தத்தின்படி, போக்குவரத்துக் கழக மேற்பார்வையாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் 7,423.95 ரூபாய் என்றும், அதிகபட்ச ஊதியம் 8,767.85 ரூபாய் என்றும் நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. அது மட்டுமன்றி, போக்குவரத்துக் கழகத் தொழி லாளர்களுக்கு, போக்கு வரத்துக் கழக வரலாற்றிலேயே முதல்முறையாக ஓய்வூதியம் வழங்கிடவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்படி பத்தாண்டு கால இடைவெளியில் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் ஊதியம் நான்கு மடங்காக உயர்ந்துள்ளது.

தனியார் போக்குவரத்து பஸ்களில் பணியாற்றும் ஓட்டுநர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியத்தை அரசு நிர்ணயிக்கிறது. ஒரு தனியார் போக்குவரத்து பஸ் ஓட்டுநர் 1995ஆம் ஆண்டில் மாதம் ஒன்றிற்கு குறைந்தபட்ச ஊதியமாக 1,740 ரூபாய் பெற்று வந்தார். கழக ஆட்சியில் 22.9.1999 அன்று வெளியிடப்பட்ட ஆணையின்படி, அதே ஓட்டுநர் 1999ஆம் ஆண்டில் மாதம் ஒன்றிற்கு 2,723.88 ரூபாயும், 2000ஆம் ஆண்டில் 2,848.84 ரூபாயும் ஊதியமாக பெற்று வருகிறார். தனியார் பஸ் ஓட்டுநரின் ஊதியம் ஐந்தாண்டுக் காலத்தில் 63 சதவீதம் உயர்ந் திருக்கிறது.

பெருவாரியாக உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் பற்றி கோலப்பன் குழு பரிந்துரைகள் ஏற்கப்பட்டு, 5.4.1999 அன்று அறிவிக்கப்பட்டு அதுமுதல் நடைமுறையில் இருந்து வருகின்றன. சொந்த ஏர்மாட்டுடன் உழவு செய்தால் நாளொன்றுக்கு குறைந்தபட்ச ஊதியம் 55

ரூபாய் என்றிருந்ததை 100 ரூபாயாக உயர்த்தியும்; சொந்த ஏர்மாடு இல்லாமல் உழவு செய்தால் குறைந்தபட்ச ஊதியம் 32 ரூபாய் என்றிருந்ததை 54 ரூபாயாக உயர்த்தியும்; நெல் அறுவடை செய்யும் விவசாயத் தொழிலாளர் அறுவடைக் களத்திற்கு எடுத்துச்சென்று கதிரடித்தல், அளந்து மூட்டைகளில் கட்டுதல் ஆகிய பணிகளிலே ஈடுபடுவோருக்கு ஊதியம் நாளொன்றுக்கு 32 ரூபாய் அல்லது விளைச்சலில் எட்டில் ஒரு பகுதி என்றிருந்ததை, ஆண் தொழிலாளர்களும், பெண் தொழிலாளர்களும் ஒரேவிதமாக இந்தப் பணியை மேற்கொள்வதால், இந்தப் பணியிலே ஆறுமணி நேரம் ஈடுபடும் ஆண் தொழிலாளர்களுக்கு 54 ரூபாய், ஐந்துமணி நேரம் மட்டும் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கு 45 ரூபாய் என்று உயர்த்தியும், அதாவது, இருபாலாரையும் ஒரேவிதமாகக் கருதி மணிக்கு 9 ரூபாய் வீதம் ஊதியம் இருக்கவேண்டும் என்றும்; விதைத்தல், நாற்று பறித்தல், நடுதல், களை எடுத்தல் போன்ற தொழில்களில் ஈடுபடும் விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நாளொன்றுக்கு விதைத்தலுக்கு 32 ரூபாய், நாற்றுப் பறித்தல், நாற்று நடுதல் ஆகியவற்றிற்கு 30 ரூபாய், களை எடுப்பதற்கு 29 ரூபாய் என்றிருந்ததை ஒருங்கிணைத்து இத்தகைய பணிகளில் ஈடுபடும் ஆண் தொழிலாளர்களுக்கு 54 ரூபாய், பெண் தொழிலாளர்களுக்கு 45 ரூபாய் என்று மணிக் கணக்குப்படி குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்தியும்; பிற விவசாயப் பணிகளிலே அதாவது வரப்பு வெட்டுதல், கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல், பால்பண்ணை மற்றும் மரம் ஏறுதல் ஆகிய

பணிகளை மேற்கொள்ளும் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு குறைந்தபட்ச ஊதியம் 32 ரூபாய் என்றிருந்ததை, ஆண் தொழிலாளர்களுக்கு 54 ரூபாய், பெண் தொழிலாளர்களுக்கு 45 ரூபாய் என்று உயர்த்தியும் அறிவிக்கப்பட்டு, நடைமுறையில் இருந்துவருகின்றன.

இலவசமாக வழங்கிடும் திட்டத்திற்குத் தேவைப்படும் வேட்டி, சேலைகள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நெய்யப்படுகின்றன. நெசவாளர்களுக்கு வழங்கப்படும் கூலி ஒரு சேலை நெய்வதற்கு, 1994ஆம் ஆண்டில் 21.45 ரூபாய் என்றிருந்ததை 2000ஆம் ஆண்டில் 34.32 ரூபாயாக, அதாவது 60 சதவீதம் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. ஒரு வேட்டி நெய்வதற்கு 1994ஆம் ஆண்டில் 20.07 ரூபாய் என்றிருந்ததை, 2000ஆம் ஆண்டில் 32.11 ரூபாயாக, அதாவது 60 சதவீதம் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

பீடி தொழிலாளர்களுக்கு 1994ஆம் ஆண்டில் 1000 சாதா பீடி உருட்ட 17.75 ரூபாய் என்பது 20.5.1998ல் கழக ஆட்சியில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தற்பொழுது 52.81 ரூபாயாக, அதாவது 200 சதவீதம் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

கட்டட வேலை செய்யும் கொத்தனார் 1995ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப் பட்ட குறைந்தபட்ச ஊதிய விவரப்படி நாளொன்றுக்கு ஊதியமாக 68.30 ரூபாய் பெற்று வந்தவர், 2000ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதிய விவரப்படி இன்று 122.98 ரூபாய் பெற்று வருகிறார். அதாவது

கொத்தனார் ஊதியம் ஐந்தாண்டுகளில் 80 சதவீதம் உயர்ந்துள்ளது.

கிரேடு–1 தையல் கலைஞர்களுக்கு அரசு குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்து வருகிறது. 1995ஆம் ஆண்டில் தையல் கலைஞருக்கு மாதம் ஒன்றிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியம் 1,136 ரூபாய். அது 2000ஆம் ஆண்டில் 1,616.40 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அதாவது ஐந்தாண்டுக் காலத்தில் கிரேடு–1 தையல் கலைஞரின் குறைந்தபட்ச ஊதியம் 42 சதவீதம் உயர்ந்துள்ளது.

வியாபாரம் செய்யும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் வேலை செய்யும் விற்பனைப் பணியாளர்களின் குறைந்த பட்ச ஊதியம் 1995ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டிருந்தபடி மாதம் ஒன்றிற்கு 1,085 ரூபாய். 2000ஆம் ஆண்டில் இந்த ஊதியம் 1,841 ரூபாயாக, அதாவது 70 சதவீதம் உயர்ந்துள்ளது.

ஓட்டல்கள் மற்றும் உணவகங்களில் பணியாற்றும் கிரேடு–4 தொழி லாளர்கள் குறைந்தபட்ச ஊதியமாக 1995ஆம் ஆண்டில் மாதம் ஒன்றிற்கு 930 ரூபாய் பெற்று வந்தனர். 2000ஆம் ஆண்டில் அந்த குறைந்தபட்ச ஊதியம் 1,853.20 என்று, அதாவது சுமார் இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் தினச் சம்பளம் 1990ஆம் ஆண்டில் 24.31 ரூபாய்; 1993ஆம் ஆண்டில் 33.20 ரூபாய்; 1996ஆம் ஆண்டிலிருந்து 46.30 ரூபாய்; 1999ஆம் ஆண்டிலிருந்து 69 ரூபாய்; 2000ஆம்

ஆண்டு டிசம்பர் மாதத்தில் இருந்து 74.62 ரூபாய். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் தினச் சம்பளம் பத்தாண்டுக் காலத்தில் மூன்று மடங்காக உயர்ந்துள்ளது.

முடிதிருத்துவோர் 1995ஆம் ஆண்டில் பெற்றுவந்த குறைந்தபட்ச மாத ஊதியம் 1,105 ரூபாய். 2000ஆம் ஆண்டில் குறைந்தபட்ச மாத ஊதியம் 1,864 ரூபாயாக உயர்ந்துள்ளது. அதாவது ஐந்தாண்டுகளில் குறைந்தபட்ச மாத ஊதியம் 68 சதவீதம் உயர்ந்துள்ளது.

சுமைகளை ஏற்றி இறக்கும் தினக்கூலி பணியாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் நாளொன்றுக்கு 1995ஆம் ஆண்டில் 20 ரூபாய்தான். இது 1988ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியம். 1988ஆம் ஆண்டில் அடிப்படை ஊதியத்தை மட்டும் நிர்ணயித்துவிட்டு, அகவிலைப்படியை நிர்ணயிக்கவில்லை. ஆனால், கழக அரசில்தான் 2.6.2000 அன்று சுமைகளை ஏற்றி இறக்கும் தினக்கூலி பணியாளர்களுக்கு நாளொன்றுக்கு அகவிலைப்படியாக 25.38 ரூபாய் என்றும், அடிப்படை ஊதியம் 70 ரூபாய் என்றும், ஆகமொத்தம் நாளொன்றுக்கு 95.38 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டது.

ஆட்டோ மற்றும் டாக்சி ஓட்டுநர்களின் மாத ஊதியம் 1995ஆம் ஆண்டில் குறைந்தபட்சமாக 950 ரூபாய் என்றும், அதிகபட்சமாக 1,351 ரூபாய் என்றும் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. அது படிப்படியாக உயர்ந்து, 2000ஆம் ஆண்டில் குறைந்தபட்ச மாத ஊதியம் 1,922 ரூபாய் என்றும்,

அதிகபட்ச மாத ஊதியம் 2,402 ரூபாய் என்றும் நிர்ணயம் செய்யப்பட்டு ஆட்டோ மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் பெற்று வருகிறார்கள். ஐந்தாண்டுக் காலத்தில் ஆட்டோ மற்றும் டாக்சி ஓட்டுநர்களின் குறைந்தபட்ச ஊதியம் இரண்டு மடங்காகவும், அதிகபட்ச ஊதியம் 78 சதவீத அளவிற்கும் உயர்ந்துள்ளது.

ஆட்டோ வாடகை 1995ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் 5.60 ரூபாய் என்றும், ஒரு கிலோ மீட்டருக்கு 2.80 ரூபாய் என்றும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1996 நவம்பர் மாதம் இந்த வாடகை விகிதம் மாற்றியமைக்கப்பட்டு, குறைந்தபட்சம் 7 ரூபாய் என்றும், ஒரு கிலோமீட்டருக்கு வாடகை 3.50 ரூபாய் என்றும் உயர்த்தப் பட்டது. ஆயிரக்கணக்கான ஆட்டோக்கள் சாலைகளில் ஓடிக்கொண்டு இருக்கின்றன. உயர்த்தப்பட்ட ஆட்டோ வாடகை நேரடியாகப் புழக்கத்திற்கு வரும் பணம்தான்.

செங்கல் மற்றும் ஓடுகள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்களின் குறைந்தபட்ச மாத ஊதியம் 828 ரூபாய் என்றும், அதிகபட்ச மாத ஊதியம் 1,208 ரூபாய் என்றும் 1995ஆம் ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. 2000ஆம் ஆண்டில் அவர்களின் குறைந்தபட்ச மாத ஊதியம் 1,419 ரூபாய் என்றும், அதிகபட்ச மாத ஊதியம் 2,009 ரூபாய் என்றும் உயர்ந்துள்ளது. அதாவது ஐந்தாண்டுக் காலத்தில் செங்கல் மற்றும் ஓடுகள் தயாரிக்கும் தொழிலில் வேலை செய்பவர்களின் குறைந்தபட்ச ஊதியம் 71

சதவீத அளவிற்கும், அதிகபட்ச ஊதியம் 66 சதவீத அளவிற்கும் உயர்ந்துள்ளது.

அப்பளம் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்களின் குறைந்தபட்ச மாத ஊதியம் 865.50 ரூபாய் என்றும், அதிகபட்ச மாத ஊதியம் 915.50 ரூபாய் என்றும் 1995ஆம் ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. 2000ஆம் ஆண்டில் குறைந்தபட்ச மாத ஊதியம் 1,724.80 ரூபாய் என்றும், அதிகபட்ச மாத ஊதியம் 1,856.80 ரூபாய் என்றும் உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஐந்தாண்டுக் காலத்தில் இவர்களின் குறைந்தபட்ச மாத ஊதியமும், அதிகபட்ச மாத ஊதியமும் இரண்டு மடங்குகளுக்கு மேல் உயர்ந்துள்ளது.

இப்படி அரசு ஊழியர்களிலிருந்து அப்பளம் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் வரை அனைத்துத் தரப்பினரும் பெற்று வருகிற ஊதியத்தில் ஓரளவு சேமிப்பு போக, பெருமளவுக்கு நேரடியாக புழக்கத்திலே வருகிற பணம்தான். அனைத்துத் தரப்பினரும் பெற்றுவரும் ஊதியம் தொடர்ந்து உயர்ந்து வருகிறபோது, புழக்கத்திலே வருகிற பணத்தின் அளவும் தொடர்ந்து அதிகரித்தே வரும். இவர்கள் பெறுகிற சம்பளம் வெள்ளைப்பணம். இது கறுப்புப்பணமாக மாறுவதற்கு வழிஉண்டா? கடல் கடந்து போவதற்குப் பாதை உண்டா? இங்கே தானே புழக்கத்தில் இருந்தாக வேண்டும். புழக்கத்திலே இருக்கிற வெள்ளைப் பணத்தின் அளவு தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகிறபோது, பணப்புழக்கம் இல்லை என்ற பிரச்சாரம் எப்படி வருகிறது?

ஆக இது செயற்கையாக செய்யப்படுகிற பொய்ப் பிரச்சாரமே அன்றி வேறென்ன? அறிவியல் ரீதியாக, நிலவிவரும் எதார்த்த நிலைகளின் அடிப்படையில் இதற்கு ஏதேனும் ஆதாரம் உண்டா?

அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் வாங்கிக் குவித்த லஞ்சப் பணத்தை, 500 ரூபாய் கரன்சி நோட்டுகளை கட்டுக் கட்டுகளாக சாக்குகளில் அடைத்து, சென்னையில் இருந்து காரில் ஏற்றி ஊர் செல்லும் வழியில் மேலூர் கடைவீதியில் சாக்குமூட்டை கீழே விழுந்து 500 ரூபாய் கரன்சி நோட்டுகள் சிதறி, போனவர்கள் வந்தவர்கள் எல்லாம் ஓடி ஓடி கைப்பற்றிக் கொண்டார்களே, அந்தமாதிரியான அநாகரிகமான நிகழ்ச்சி எந்த ஆட்சியிலாவது நடந்ததுண்டா? அப்படி கட்டுக் கட்டுகளாக வாங்கி குவித்தவர்கள்தானே இன்று பணப் புழக்கம் இல்லை என்று மாய்மாலம் காட்டுகிறார்கள்!

அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் இடைத்தரகர்கள், அமைச்சர்கள், அமைச்சர்களின் உதவியாளர்கள் ஊழல் பணத்தை பங்கு போட்டு சுருட்டிக் கொண்டு கைநிறையப் பணத்தை எடுத்து, ஊதாரிச் செலவு செய்து, ஊரை ஏமாற்றித் திரிந்ததற்கு ஏராளமான உதாரணங்கள் உண்டு. அப்படிப்பட்ட ஊழல் பணம் இன்று புழக்கத்தில் இல்லை என்பது உண்மைதான்.

கடந்த ஆட்சிக்கால எம்.எல்.ஏ., வேலை வாங்கித் தருகிறேன், மாறுதல் வாங்கித் தருகிறேன் என்று ஆசை காட்டி இரண்டு, மூன்று பேரை ஊரிலிருந்து அழைத்துக் கொண்டு

சென்னைக்கு வருவார். சென்னைக்கு வருவதற்கு அவருடன் வருபவர்கள் எம்.எல்.ஏ.க்கும் சேர்த்து புகைவண்டிப் பயணச்சீட்டை வாங்குவார்கள். எழும்பூர் இரயில் நிலையத்தில் இறங்கியதும், ஆட்டோவிலோ அல்லது டாக்சியிலோ நேராக சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கல்ல, மூன்று நட்சத்திர ஓட்டல் அல்லது ஐந்து நட்சத்திர ஓட்டலுக்குச் செல்வார்கள். ஓட்டலுக்குச் சென்றதும், டாக்சி வாடகை எவ்வளவு என்று எம்.எல்.ஏ.கேட்பார். 135 ரூபாய் என்று டாக்சி டிரைவர் சொல்வார். உடனே எம்.எல்.ஏ., தன்னுடன் வந்தவர்களிடம் டாக்சி டிரைவரிடம் 200 ரூபாய் கொடுக்கச் சொல்வார். ஓட்டலில் தங்கியிருக்கும்பொழுது எம்.எல்.ஏ., தன்னுடன் வந்தவர்களை அழைத்துக் கொண்டு உணவு விடுதிக்குச் செல்வார். சாப்பிட்டு முடிந்ததும், பில் எவ்வளவு என்று கேட்பார். 210 ரூபாய் என்று பதில் வரும். உடனே எம்.எல்.ஏ., 250 ரூபாய் கொடுக்கச் சொல்வார். நேரே அமைச்சரின் வீட்டிற்குச் செல்வார்கள். சென்றதும், டாக்சி டிரைவருக்கு முன்பு கொடுத்ததைப்போலவே வாடகைப் பணம் கொடுக்கச் சொல்வார். அமைச்சரை பார்த்துவிட்டு வெளியே வந்ததும், வேலைக்கோ அல்லது மாறுதலுக்கோ பரிந்துரை செய்துவிட்டதாகவும், காரியம் முடிந்துவிடும் என்றும் சொல்லி தன்னுடன் வந்தவர்களிடம் தனக்குரிய 50,000 ரூபாயையோ, ஒரு இலட்சம் ரூபாயையோ பெற்றுக்கொள்வார். அமைச்சரின் உதவியாளருக்கு, அமைச்சரின் ஓட்டுநருக்கு தன்னுடன் வந்தவர்களைப் பார்த்து, ஆயிரம் என்றும் இரண்டாயிரம் என்றும் பணம் கொடுக்கச் சொல்வார். இப்படி தாராளமாகப்

பணம் புழங்குவதற்குக் காரணமான லஞ்சப் பழக்கம் என்பது அங்கிங்கு என்று இல்லாமல், எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருந்த நிலை இன்று வெகுவாக மாறிவிடவில்லையா? நியமனங்களும், மாறுதல்களும் முறைப்படுத்தப்பட்டு விட்டதால் பரிந்துரை களுக்கு இடமேதும் இல்லாமல் அப்பாவி மக்களை ஏய்த்துப் பிழைப்பதற்கு வழியேதுமில்லாமல் பெருமளவுக்கு அடைக்கப்பட்டு விட்டதல்லவா? அதனால் பாதிக்கப்பட்டவர்கள் ஒன்று சேர்ந்து, மறைமுகமாக பொத்தாம்பொதுவில் தூவி வரும் விஷ விதைதான் பணப்புழக்கம் இல்லை என்பது. இந்த விஷ விதை சொத்தை விதைதான். மண்ணிலும் விழாது, விழுந்தாலும் முளைக்காது, மண்ணோடு மண்ணாய் மக்கிப் போகும்.

2001, ஜனவரி 23 அன்று வெளியிடப்பட்ட இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மைய **(Centre for Monitoring Indian Economy)** அறிக்கையின்படி, 1996 மே திங்களில், தமிழகத்தில் 90 ஆயிரத்து 650 கோடி ரூபாய் என இருந்த தொழில் முதலீடு, 1996 மே திங்களுக்குப் பிறகு, 378 தொழில் திட்டங்களில் மொத்தம் 1 இலட்சத்து 65 ஆயிரத்து 40 கோடி ரூபாய் என உயர்ந்துள்ளது என்பது தெரிகிறது. அதாவது, கழக ஆட்சியில் தொழில் முதலீடுகள் மொத்தம் 74 ஆயிரத்து 390 கோடி ரூபாய். இந்தப் பணம் அனைத்தும் வெள்ளைப்பணம். நேரடியாகப் புழக்கத்திற்கு வந்துள்ள பணம்.

கடந்த ஆட்சிக் காலத்தில், 1992–93ஆம் ஆண்டில் 6 ஆயிரத்து 808 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் மட்டுமே

தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி ஆயின. ஆனால் கழக ஆட்சியில், 1996–97ஆம் ஆண்டில் 17 ஆயிரத்து 802 கோடி ரூபாய் அளவிற்கும், 1997–98ஆம் ஆண்டில் 18 ஆயிரத்து 982 கோடி ரூபாய் அளவிற்கும் ஏற்றுமதி உயர்ந்துள்ளது. 1999–2000ஆம் ஆண்டில் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி மதிப்பு 21 ஆயிரத்து 387 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது.

1994–95ஆம் ஆண்டில் மென்பொருள் ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு 12.17 கோடி ரூபாய் என்கிற அளவிற்குத்தான் இருந்தது. ஆனால், 1998–99ஆம் ஆண்டில் அது 1,246 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்தது. 1999–2000ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து மென்பொருள் ஏற்றுமதியின் அளவு 1,914 கோடி ரூபாய் ஆகும்.

இப்படி ஏற்றுமதி மூலம் தமிழகத்திற்குக் கிடைத்திடும் அன்னியச் செலாவணி கழக ஆட்சிக்காலத்தில் பெருமளவிற்கு உயர்ந்து வருகிறது. கிடைத்திடும் அன்னியச் செலாவணி அனைத்தும் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அரணாக அமைவதோடு, கொல்லைப்புறமாக அல்லாமல் நேரடியாகவே புழக்கத்திற்கு வரும் பணம்தான்.

தமிழகத்தின் முதல்நிலைத் தொழில்களான **(Primary sector)** வேளாண்மை, வனவளம், மீன்வளம், கனிமவளம் ஆகியவற்றின் மொத்த உற்பத்தி மதிப்பு 1995–96ஆம் ஆண்டில் 14,660.10 கோடி ரூபாய். 1999–2000ஆம் ஆண்டில் மொத்த உற்பத்தி மதிப்பு 24,669.18 கோடி ரூபாய். அதாவது கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற நான்காண்டுகளில் 68 சதவீதம்

முதல்நிலைத் தொழில்களின் உற்பத்தி மதிப்பு உயர்ந்துள்ளது.

1996–97ஆம் ஆண்டிற்கும், 1998–99ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் நிலையான விலைகளின் அடிப்படையில் **(At constant prices)** தமிழ்நாட்டில் மொத்த உற்பத்தியின் **(Gross State Domestic Product)** வளர்ச்சி வீதம் சராசரியாக ஆண்டொன்றுக்கு 6.05 சதவீதமாக இருந்தது. கழக அரசு மேற்கொண்டு வரும் பலவகைப்பட்ட முற்போக்கு நடவடிக்கைகளின் காரணமாக, 1999–2000ஆம் ஆண்டில் வளர்ச்சி 7.04 சதவீதமாக அதிகரித்துள்ளது. அண்மையில் சட்டப்பேரவையில் வெளியிட்ட இடைக்கால நிதிநிலை அறிக்கையில் நான் குறிப்பிட்டவாறு இந்தியாவிலேயே பொருளாதார வளர்ச்சி மிக உயர்ந்துள்ள மூன்று மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் விளங்குகிறது.

வங்கிகள் வழங்கும் கடன்கள் **(Credits)**, வங்கிகள் ஈட்டும் வைப்புத் தொகைகள் **(Deposits)** பணப்புழக்கத்தை நிர்ணயிக்கும் மிக முக்கியமான பொருளியல் குறியீடுகள் ஆகும். கடன் வைப்புத்தொகை விகிதாச்சாரத்தில் **(Credit Deposit Ratio)** அகில இந்திய அளவில் தமிழகம் முதலிடத்தைப் பெற்றிருக்கிறது. அனைத்திந்திய அளவில் கடன் வைப்புத்தொகை விகிதாச்சாரம் 55.5 சதவீதம் என்ற நிலையில், தமிழகத்தில் 92.3 சதவீதமாகும். இப்படி பணப்புழக்கத்திற்கான அடிப்படை பொருளியல் குறியீடுகள் தமிழகத்தைப் பொறுத்தவரை மிக உயர்ந்த அளவில் பிரகாசமான நிலையில் இருக்கும்பொழுது, பணப்புழக்கம்

இல்லை என்ற வாதம் எப்படிப் பொருந்தும்?

தமிழ்நாட்டில் ஆண்டொன்றுக்குத் தனிநபர் வருமானம் **(Per capita income)** 1995–96ல் 11,894 ரூபாய் என்ற அளவிற்கு இருந்து, 1999–2000ஆம் ஆண்டில் 18,786 ரூபாய் என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது. இவ்வாறு தனிநபர் வருமானம் தமிழகத்திலே அதிகரித்து வருகிற காரணத்தினாலேதான் வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள்தொகை தமிழகத்திலே இந்தியாவில் வேறு எந்த பெரிய மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு குறைந்து வருகிறது.

மத்திய திட்டக்குழு 23.2.2001 அன்று "தேசிய மாதிரி ஆய்வு அமைப்பின் **(National Sample Survey Organisation)**" மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் அளித்து, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் **(Below Poverty Line)** பற்றிய கணக்கெடுப்பு முடிவுகளையும் வெளியிட்டது. இந்தியாவிலே உள்ள மொத்த மக்கள் தொகையில் 1993–94ஆம் ஆண்டில் 35.97 விழுக்காடாக இருந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள்தொகை, 1999–2000ஆம் ஆண்டில் 26.10 விழுக்காடாக குறைந்துள்ளது. இதில் கிராமப்புறங்களில் 37.27 விழுக் காட்டிலிருந்து 27.09 விழுக்காடாகவும், நகர்ப்புறங்களில் 32.36 விழுக்காட்டி லிருந்து 23.62 விழுக்காடாகவும் வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள்தொகையின் எண்ணிக்கை குறைந் துள்ளது.

இந்திய அளவிலே இந்த அளவிற்கு வறுமைக்

கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள்தொகை ஒட்டுமொத்தமாகக் குறைந்திருக்க, மாநிலங்களிலே எந்த அளவிற்கு வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் தொகையின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்பதையும் அந்தப் புள்ளிவிவரம் சுட்டிக்காட்டி இருக்கிறது. தமிழகத்திலே 1993–94ஆம் ஆண்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழேயிருந்த மக்கள்தொகை 35.03 விழுக்காட்டிலிருந்து, 1999–2000ஆம் ஆண்டில் 21.12 விழுக்காடு அளவிற்கு அதாவது 13.91 விழுக்காடு குறைந்திருக்கிறது. இந்தியாவிலே உள்ள அனைத்துப் பெரிய மாநிலங்களையும் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது, வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள்தொகை தமிழகத்திலேதான் இந்த ஐந்தாண்டுகளில் அதிக அளவிற்கு குறைந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் மட்டும் கடந்த இரண்டாண்டுகளில் வருமான வரி செலுத்துவோரின் எண்ணிக்கை இரண்டரை மடங்காக உயர்ந்துள்ளதை மத்திய அரசு வருமானவரித் துறைப் புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை மேற்கொண்ட கணக் கெடுப்பின்படி தமிழகத்தில் 1995ஆம் ஆண்டில் தனிநபர்கள் பயன் படுத்துவதற்கென்று 4,66,950 மோட்டார் சைக்கிள்களும், 3,47,789 ஸ்கூட்டர்களும், 10,00,494 மொபெட்களும், 2,76,399 கார்களும் இருந்தன. 1998ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தனிநபர்கள் பயன்படுத்துவதற்கென்று 7,21,679 மோட்டார் சைக்கிள்களும்,

4,88,743 ஸ்கூட்டர்களும், 16,06,398 மொபெட்களும், 3,47,977 கார்களும் என்று எண்ணிக்கைகள் அதிகரித்தன. இன்னும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. தனிநபர்கள் பயன்படுத்தும் வாகனங்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவது பணப்புழக்கம் இல்லை என்பதையா காட்டுகிறது ?

இப்படி தனிநபர் வருமானம் உயர்ந்து, வருமானவரி செலுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்து, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள்தொகை வெகுவாகக் குறைந்து, தனிநபர்கள் பயன்படுத்திக்கொள்ள சொந்தமாக வாங்கும் வாகனங்களின் எண்ணிக்கை உயர்ந்துவரும் உன்னதமான நிலை உருவாகிவரும் இந்தக் காலகட்டத்தில் பணப்புழக்கம் இல்லை என்ற பிரச்சாரம் எப்படி எடுபடும் ?

தமிழகத்து மக்களிடையே சம்பாதிப்பதில் ஒரு பகுதியை எதிர்காலத்திற்கு சேமிக்கும் பழக்கம் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. தேசிய சேமிப்புத் திட்டத்தின் மூலம் 1985–86ஆம் ஆண்டில் சேர்ந்த தொகை 184.06 கோடி ரூபாய்; 1990–91ல் 408.86 கோடி ரூபாய்; 1995–96ல் 490.70 கோடி ரூபாய்; 1998–99ல் 1,154.95 கோடி ரூபாய்; 1999–2000ல் 1,604.74 கோடி ரூபாய். இப்படி வேகமாக உயர்ந்துவரும் சேமிப்பு ஆரோக்கியமான பணப் புழக்கத்தைத்தான் புலப்படுத்துகிறது.

இந்த அரசு 1989ல் தொடங்கிய மகளிர் குழுக்கள் வளர்ச்சி பெற்று இன்று 11 இலட்சத்து 5 ஆயிரத்து 577 மகளிர் உறுப்பினர்களைக் கொண்ட 63,598 சுய நிதிக்

குழுக்களின் மூலம் சேமிக்கப்பட்டுள்ள தொகை 68.71 கோடி ரூபாய் என்பதையும் மறந்து விடக்கூடாது. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் இப்படி சேமிக்கப்பட்ட தொகை, ஒரு கோடியே 92 இலட்சம்தான்!

உடன்பிறப்பே,

இவ்வளவு புள்ளிவிவரங்களையும் சேகரித்து இரண்டு மூன்று நாள் கண் விழித்து, உதவியாளர்களின் துணையையும் பெற்று, ஆய்ந்து, தேர்ந்து வழங்கி யிருக்கிறேன். பணப்புழக்கம் இல்லை என்பது ஒரு மாயத்தோற்றமே; பொய்யை மெய்போலப் புனைந்துரைத்திடும் வித்தையே என்பதுதான் இந்தப் புள்ளி விவரங்கள் நமக்குப் புரியவைக்கும் செய்தியாகும். தமிழ்நாட்டில் தனிநபர் வருமானம் உயர்கிறது; பொருள்கள் உற்பத்தி அதிகரிக்கிறது; எல்லா முனைகளிலும் ஏற்றம் தெரிகிறது; வெள்ளைப் பணப்புழக்கம் தொய்வின்றி தொடர்ந்து உயர்ந்து வருகின்றது. கறுப்புப் பணத்தில் இச்சை மிகக் கொண்டோர் பசப்பு வார்த்தை காட்டி, அப்பாவி பொதுமக்களை திசைதிருப்பிட எத்தனித்துக் கொண் டிருக்கிறார்கள். விழிப்புடனும், அறிவுபூர்வமாகவும் பணி யாற்ற வேண்டிய வேளை இது. நீ புரிந்துகொண்டது அனைத்தையும் ஊரார் அனைவர்க்கும் புலப்படுத்துக!

அன்புள்ள,

மு.க.

வெளியீடு: தி.மு.க. இளைஞரணி

அச்சிட்டோர்: கலையகம் அச்சகம், சென்னை – 34.

நன்றி : முரசொலி